மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரைப் பொறுத்த அளவில், தனியார் நூற்பாலைகள் அதிகமாக இருக்கின்றன. தமிழகத்தில் ஏறத்தாழ 18 கூட்டுறவு நூற்பாலைகள் இருக்கின்றன. இதன் மூலமாக 27 இலட்சம் கிலோகிராம் நூலை நாம் உற்பத்தி செய்கிறோம். தற்போது நூல் உற்பத்தியில் நாம் உபரி மாநிலமாக இருக்கின்ற காரணத்தினால் இந்தக் கேள்விக்கே இடம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், தற்போது நூல் உற்பத்தியிலே அதிக தேக்கம் இருக்கிறது என்று கூறுகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த நிதி ஆண்டிலாவது இதுபற்றி ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசிப்பார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் சார்பில் நூற்பாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 8, திரு. செ. பெருமாள், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

8—

ஏற்காடு தொகுதி கோணஞ்செட்டியூரில் பாலத்தை புதுப்பித்தல்.

20169—திரு. செ. பெருமாள்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஏற்காடு தொகுதியில் கோணஞ்செட்டியூர் அருகேயுள்ள பாலத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

1994 நவம்பர் 4]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம் பெய்த பலத்த மழையினால் ஆணைமடுவு டாம் நிரம்பி அதற்குக் கீழே உள்ள ஆற்றுப் பாலம் இடிந்து தரைமட்டமாகி உள்ளது. அதன் பிறகு இப்போது மணல் மூட்டைகளை அடுக்கி வைத்து தற்காலிகமாக அங்கே போக்குவரத்து சரிசெய்யப்பட்டு, பஸ்கள் விடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்போது மழைக் காலமாக இருக்கின்றது. அங்கு கிட்டத்தட்ட 17,18 கிராமங்கள் இருக்கின்றன. சுமார் 30 ஆயிரம் பேர்கள் வாழ்கின்றனர். அவர்கள் 15 கி.மீ. தூரம் நடந்து செல்லக்கூடிய சூழ்நிலை உள்ளது. அந்த நிலைமையைப் பார்க்கின்ற போது, இந்த மழைக் காலக் கூட்டத் தொடரிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வரும் நிதி ஆண்டிலே மறுபரிசீலனை செய்து, அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வாரா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல ஏற்கெனவே ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக அந்தப் பாலம் அடித்துச் செல்லப்பட்டது என்பதை அரசு அறியும். அதற்காக மாற்றுப்பாதை அமைக்கப்பட்டு, வாகனங்கள் திருப்பி விடப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ 30 இலட்சம் செலவு ஆகும் என்ற காரணத்தினால்தான் அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே நிதி ஆதாரங்களைப் பொறுத்து, அந்தப் பகுதி மக்களுடைய உணர்வுகளை மதித்து, இந்த அரசு செயலாற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அந்தப் பாலமானது எப்போது கட்டப்படும் என்பதை அறிய விரும்புவதோடு, இனி வருகின்ற காலம் மழைக் காலமாக இருப்பதால், இப்போது டெம்பரரியாக மணல் மூட்டைகளை அடுக்கி வைத்து,

அதன் மேல் பஸ்கள் போய்க் கொண்டிருக்கின்றன. பலத்த மழை வந்தால் மணல் மூட்டைகள் அடித்துச் செல்லக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, மிக விரைவிலே இந்தப் பாலத்தைப் புதுப்பித்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அது தாம்போகி பாலமாக இருந்த காரணத்தினாலேதான் வெள்ளக்காலங்களில் அடித்துச் செல்லப் பட்டிருக்கிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. ஆகவேதான் அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு அங்கே உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டுமென்று துறையினுடைய அதிகாரிகள் ஆய்வு செய்திருக்கிறார்கள். ஆகவே, இனி அமைக்கப்படுகின்ற பாலம் உயர்மட்டப் பாலமாகத்தான் இருக்க வேண்டுமென்று அரசு விரும்புகிறது. ஆகவே, தாம்போகி பாலம் அமைத்தால் வெள்ளம் வருகின்றபோது மறுபடியும் அடித்துச் செல்லப்பட்டு விடும். எனவே, நிதியும் வீணாகி விடும். வெகுவிரைவிலே நிதி ஆதாரங்களைச் சரி செய்து, உயர்மட்டப் பாலம் கட்டப்படும். அப்படி ஏதாவது மழைக் காலங்களில் ஏற்கெனவே இருக்கின்ற தற்காலிகமாக அமைக்கப்பட்ட பாதை அடித்துச் செல்லப்படுமானால், உடனடியாக நிவாரணப் பணிகளை மேற்கொண்டு போக்குவரத்தைச் சீரமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும், எந்தவிதத்திலும் போக்குவரத்து பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10.30*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

9—

பாகலூர் மற்றும் சூளகிரியில் வீட்டு வசதி வாரியம் வீடுகள் கட்டுதல்.

***23195—திரு. கே.ஏ. மனோகரன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--